**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**கமத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 285 | கமத்தொழில் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 5,629,894,200 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 4,732,234,801 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 507,051,083 மற்றும் ரூபா 390,608,316 அல்லது தேறிய ஏற்பாட்டில் முறையே 28 சதவீதம் மற்றும் 10 சதவீதம் ஆகக் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 118 | 1,829,630,000 | 1,322,578,917 | 507,051,083 | 28 |
| 285 | 3,800,264,200 | 3,409,655,884 | 390,608,316 | 10 |
| **மொத்தம்** | **5,629,894,200** | **4,732,234,801** | **897,659,399** | **16** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களினால் ரூபா 750,952,459 கூட்டுமொத்தமான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாடுகளின் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஏற்பாட்டினை பெற்றுக்கொண்ட அமைச்சு மற்றும் திணைக்களம் | ஏற்பாட்டினை வழங்கிய அமைச்சு, திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| கமத்தொழில் அமைச்சு | சமுர்த்தி ஆணையாளர் நாயகம் | 25,741,000 | 25,741,000 | - |
| கமத்தொழில் அமைச்சு | மாவட்டச் செயலகம் கம்பஹா | 510,000 | 396,977 | 113,023 |
| கமத்தொழில் அமைச்சு | கமத்தொழில் திணைக்களம் | 6,500,460 | 2,419,888 | 4,080,572 |
| கமத்தொழில் அமைச்சு | வன சீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு | 19,420,000 | 21,988,317 | (2,568,317) |
| கமத்தொழில் அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 410,300,000 | 50,697,976 | 359,602,024 |
| கமத்தொழில் அமைச்சு | மாவட்டச் செயலகம் அம்பாந்தோட்டை | 98,997 | 98,977 | - |
| கமத்தொழில் திணைக்களம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 97,611,577 | 92,710,794 | 4,900,783 |

| | | | | |
|---|---|---|---|---|
| கமத்தொழில் திணைக்களம் | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்திவள அமைச்சு | 69,500 | 58,200 | 11,250 |
| கமத்தொழில் திணைக்களம் | கமத்தொழில் அமைச்சு | 76,827,052 | 60,148,963 | 16,678,089 |
| **மொத்தம்** | | **637,078,586** | **254,261,162** | **382,817,424** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

கமத்தொழில் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டிற்கு வருமான குறியீடொன்றிற்காக ரூபா 130 மில்லியன் மொத்தமான வருமானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 167.6 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 129 சதவீத வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| 20.03.02.18 | 130,000,000 | 167,655,907 | 37,655,907 | 129 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11801 | 8,500,000 | 8,267,805 | 4,800,000 | 8,686,155 | 55,000,000 | 34,322,781 |
| 28501 | 185,000,000 | 97,320,669 | 135,000,000 | 149,824,944 | 600,000,000 | 349,523,047 |

### 2.3.2 வர்த்தக முற்பணங்கள் கணக்கு

**அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் வர்த்தக முற்பணங்கள் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.**

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய வர்த்தக முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 28502 | 416,000,000 | 413,984,762 | 416,000,000 | 424,160,945 | 70,000,000 | 17,155,847 |

#### (இ) நிதி விளைவுகள்

வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் கீழுள்ளவாறாகும்.

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி வளைவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2012 | |
| | | (நட்டம்) கருதுகோள் கட்டணம் நீங்கலாக | இலாபம் கருதுகோள் கட்டணம் அடங்கலாக | இலாபம் கருதுகோள் கட்டணம் நீங்கலாக | இலாபம் கருதுகோள் கட்டணம் அடங்கலாக |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 28502 | விவசாய பண்ணைகளை பராமரித்தல் மற்றும் விதைகள் விற்பனை முற்பணங்கள் கணக்கு | (9,472,475) | 7,899,390 | 33,108,357 | 49,103,017 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கட்டுநிதி மீதிகள் ரூபா 11,621,248 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கமத்தொழில் அமைச்சு | 7002/0000/00/0325/0013/000 | 8,898,370 |
| கமத்தொழில் திணைக்களம் | 7002/0000/00/0081/0013/000 | 2,722,878 |
| மொத்தம் | | 11,621,248 |

### 2.4.2 பொதுவைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 66,664,436 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **அமைச்சு/ திணைக்களம்** | **பொதுவைப்புக் கணக்கு இல.** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| | | ரூபா |
| கமத்தொழில் அமைச்சு | 6000/0000/00/0015/0031/000 | 7,751,220 |
| கமத்தொழில் திணைக்களம் | 6000/0000/00/0015/0140/000 | 58,913,216 |
| மொத்தம் | | 66,664,436 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

**1. தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு**

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கமத்தொழில் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ)

மற்றும் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 12 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 45 சதவீத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,028,947 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்த்தியோகத்தர்களின் கடன் மீதிகள் பட்டோலையில் உள்ளடங்கியிருந்த ரூபா 23,835 தொகையான நானாவிதக் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

நெற் பயிர்ச்செய்கைக்கான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 150 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச் செயற்பாடு மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சுக்குச் சொந்தமான 95 வாகனங்கள் 20 வெளிவாரி நிறுவனங்களிற்கு முறையான விதத்தில் ஒப்படைக்கப்படாது வழங்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்**

ஏனைய 09 நிறுவவனங்களிற்குச் சொந்தமான 19 வாகனங்கள் அமைச்சினால் முறையாக கையேற்கப்படாது பயன்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 செயலாற்றுகை**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்டிருந்த செயன்முன்னேற்றம் அடையப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 07 மாவட்டங்களில் 32,575 ஹெக்டயர் சோயா அவரையினை பயிரிடுவதற்காக மீளாய்வாண்டில் அமைச்சினால் ரூபா 132 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 43.7 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு 11,397 ஹெக்டயர்களில் சோயா அவரை பயிரிடப்பட்டிருந்தது. அமைச்சின் தலையீட்டில் சோயா அவரை விதைகள் நிவாரண விலையில் விவசாயிகளிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சில கம்பனிகளால் விவசாயிகளிற்கு வழங்கப்பட்டிருந்த விதைகள் தரமற்றவையாக காணப்பட்டமையால் பயிரிடுவதனால் எதிர்பார்க்கப்பட்ட பயனை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. அநுராதபுரம் மாவட்டத்தில் 2,814 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த சோயா அவரை விதைகள் தரத்தில் குறைந்தவையாக இருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலை பெறமுடியாது போயிருந்ததுடன் நட்டமேற்படுத்திய விதைகளிற்காக விவசாயிகளிற்கு இழப்பீட்டை வழங்குவதற்கும் கம்பனி இணங்கியிருந்தது. விதைகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சினால் கம்பனியொன்றிற்கு ரூபா 18,012,500 செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியினால் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதியளவில் இழப்பீடாக ரூபா 15,457,209 தொகை விவசாயிகளிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இன்னும் ரூபா 11,076,611 தொகையை இழப்பீடாக அக் கம்பனி விவசாயிகளிற்கு வழங்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செத்தல் மிளகாய் உற்பத்திக்காக 15 மாவட்டங்களில் 4,423.7 ஹெக்டயர் மிளகாய் பயிரிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 11.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மிளகாய் பயிர்ச்செய்கை செயன்முன்னேற்ற அறிக்கையின் படி அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த செயன்முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது.

(இ) இரத்தினபுரி, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் 70 ஹெக்டயர்களில் சின்ன வெங்காயத்தினை பயிரிடுவதற்காக ரூபா 10.94 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளை தெரிவுசெய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 3.521 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உள்ளபடியாக விதைகளை வழங்க முடியாது போயிருந்தமையினால் புத்தளம் மாவட்டத்திலும் விவசாயிகள் ஆர்வம் காட்டாமையினால் மொனராகலை மாவட்டத்திலும் சின்ன வெங்காயம் பயிரிடப்படவில்லை என அமைச்சின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஈ) சுற்றாடல் பாதிப்பற்ற பாரம்பரிய சிங்கள பயிர்ச்செய்கைக்காக மீளாய்வாண்டில் ரூபா30 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 20 மாவட்டங்களில் 8,874.6 ஹெக்டயர் பயரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், பௌதீக செயன்முன்னேற்றம் 4,262 ஹெக்டயர் ஆக இருந்ததுடன் செலவினம் ரூபா 20.6 மில்லியனாக காணப்பட்டது.

(உ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரிய வெங்காயம் மற்றும் பயரினை பயிரிடுவதற்காக மீளாய்வாண்டில் முறையே ரூபா 32.6 மில்லியன் மற்றும் ரூபா 12.63 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பயிர்செய்கைக்காக முறையே ரூபா 32.35 மில்லியன் மற்றும் ரூபா 9.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதிக மழை மற்றும் விதைகளின் தட்டுப்பாடு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையமுடியாது போனதாக அமைச்சின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

## 1.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வர்த்தக பண்ணைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 62,777,800 செலவிடப்பட்டு 450 நலனாளிகளிற்காக விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.8 நட்டங்களும் சேதங்களும்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5,256.71 ஹெக்டயர் 06 வகையான உப பயிர்களை பயிரிடுவதற்காக ரூபா 4.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இப் பயிர்ச்செய்கை வெள்ளத்தினால் அழிவுற்றதாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாட்டினை ஊக்குவித்தல்**

2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2012 சிறுபோகத்தின் போது மேற்படி செயற்திட்டத்தினை 4 மாவட்டங்களில் பரீட்சாத்த செயற்திட்டமாக அமுல்படுத்துதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2 மாவட்டங்களில் மாத்திரம் இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து ஒரு மாதத்தினுள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்காது விவசாயிகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 73,745,836 மற்றும் 26,306,539 செலவிடப்பட்டிருந்தது. அந்த உபகரணங்கள் மற்றும் பொருட்களிலிருந்து ரூபா 9,368,140 பெறுமதியான உபகரணங்களும் பொருட்களும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பகர்ந்தளிக்கப்படாதிருந்ததுடன் அவை அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை கமலநல சேவைகள் நிலையங்களின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. ரூபா 6,551,110 பெறுமதியான உபகரணங்களின் பகிர்ந்தளிப்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற சேதனப் பசளையின் அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்காது உற்பத்தி செய்யப்பட்ட 1 கி.கி. சேதனப் பசளைக்கு ரூபா 8.00

வீதம் ரூபா 36.17 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி விவசாயிகளிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அரிசி ஏற்றுமதி வலயத்தை தாபித்தல்**

அரிசி ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக அரிசி ஏற்றுமதி வலயங்களை தாபிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 25 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 8,523 மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இலங்கை நெல் இனங்களிற்கு சர்வதேச சந்தையில் காணப்படுகின்ற குறைந்த கேள்வி மற்றும் உள்நாட்டு அரிசி உற்பத்திச் செலவு அதிகமாகக் காணப்படுதல் போன்றன காரணமாக ஏற்றுமதி செய்யப்படாதிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போதும் ரூபா 75 மில்லியன் ஏற்பாடு இதற்காக செய்யப்பட்டிருந்தது. இரசாயனப் பொருட்கள் மற்றும் பெரசூட் தட்டுக்களை கொள்வனவு செய்வதற்கும், களப் பரிசோதனை, ஆராய்ச்சி, தொழில்நுட்ப பிரசாரம் போன்ற நடவடிக்கைகளிற்காகவும் மாத்திரம் ரூபா 2.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2013/14 பெரும்போகத்தில் நெற் பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 126 | 113 | 13 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 202 | 159 | 43 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 122 | 65 | 57 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 455 | 345 | 114 | 04 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 114 வெற்றிடங்களை நிரப்பவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டில் ஏனைய தரப்பினர்களிற்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| இரண்டாம் நிலை | 01 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 2010 திசெம்பர் 14 முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை |
| -மேற்படி- | 01 | தொண்டர் படையில் அர்ப்பணிப்புச் சேவை | 2008 செப்தெம்பர் 24 முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை |

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

டவர்ஹோல் மன்றம், தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பவற்றிலிருந்து சம்பளம் பெறுகின்ற 03 சாரதிகள் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2. தலைப்பு 285 – கமத்தொழில் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

கமத்தொழில் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமத்தொழில் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்காய்வு ஐய வினாக்களிற்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 25 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை, உரிய வேளையில் வேலை ஆரம்பிக்கப்பட்டு காலங்கடந்து கட்டுநிதி பெற்றுச் செலுத்தாமை மற்றும் ஆய்வு செய்யப்படாமல் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 19 சதவீதத்திற்கும் 53 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுததியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 1,045,689 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### (இ) கட்டு நிதிக் கணக்கு

2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் திணைக்களத்தினால் திறைசேரிக்கு தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,024,796 ஆகும்.

**(ஈ) வருமானக் கணக்கு**

-------------------------------

திணைக்களத்தின் 20.03.02.18 ஆம் இலக்க வருமானக் குறிப்பீட்டிற்குரிய வருமானக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 167,655,907 தொகையான மொத்த தேறிய வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்குரிய எனினும் முன்னைய ஆண்டின் போது பிரதேச அலுவலகங்களிலிருந்தும் பிரிவுகளிலிருந்தும் தலைமை அலுவலகத்திற்கு 24 சந்தர்ப்பங்களின் போது அனுப்பப்பட்ட ரூபா 3,115,080 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

**(உ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

-------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடய இல. 28501 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,701,065 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவீடுசெய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இரண்டு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 300,205 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் மீதிக்குரிய காணியின் உரித்துறுதி திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படவில்லை.

**(ஊ) வணிக முற்பணக் கணக்கு**

--------------------------------------------

28502 ஆம் விடய இலக்க கமநல நாற்று மேடை பராமரிப்பு மற்றும் விற்பனை முற்பணக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்பணக் கணக்கு தொடர்பாக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது.

(ii) முற்பணக் கணக்கிற்குரிய அறவீடுகள் நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 919,036 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 22 வருடம் முதல் 31 வருடம் வரையான காலப்பகுதிக்குரிய தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 515,736 ஆக இருந்தது.

(iv) மீளாய்வாண்டின் கணக்குகளில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொலன்னறுவையில் அரசாங்கத்தின் நாற்றுக்கள் உற்பத்தி நாற்றுமேடைக் கையிருப்பின் கீழ் காணப்படுகின்ற ரூபா 1,109,463 தொகையான பாவனைக்குரிய நெல் இருப்பின் பெறுமதியில் 1999 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுவதை ரூபா 19,344 தொகையான பாவனைக்குரிய நெல் பற்றாக்குறையின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் இருப்பின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையினால் இலாபம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- பீதுறுதலாகல அரசாங்கத்தின் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி நாற்று மேடையில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,240,606 தொகையான வளரும் பயிர்செய்கைப் பெறுமதி ரூபா 655,206 தொகை அதிகரித்து ரூபா 2,895,812 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- குறைத்து பெறும் மீதி முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்ற உழவு இயந்திரம் மற்றும் டேலரின் ஆண்டிற்குரிய ரூபா 5,549,995 தொகையான பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 5,453,015 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 96,980 தொகை குறைவாக முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) முற்பண செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- முற்பணக் கணக்கின் கீழ் அமுலாக்கப்படுகின்ற 19 பண்ணைகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தக்கூடிய காணியின் அளவு 1,000 ஹெக்டேயர் ஆக இருந்த போதிலும் அதில் 2012/2013 பெரும்போகத்தின் போது 361.5 ஹெக்டேயர் அல்லது 36 சதவீதமும், 2013 சிறுபோகத்தின் போது 435.5 ஹெக்டேயர் அல்லது 43 சதவீதமும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு பண்ணைகளும் பெற்ற இலாபம் மற்றும் நட்டம் கடந்த 04 வருடங்களுடன் இணக்கஞ் செய்த போது இரண்டு பண்ணைகள் அதன் மொத்த காலப்பகுதியிலும் நட்டத்தைப் பெற்றிருந்தது. ஒரு பண்ணை 03 வருடங்களுக்கு தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் மேலும் ஒரு பண்ணை மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் நட்டத்தைப் பெற்றிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | பண்ணை | பெறப்பட்ட இலாபம்/ (நட்டம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | அலுத்தரம | (15,532,215) | (6,201,412) | 8,208,945 | 2,114,171 | 12,349,061 |
| (ii) | படஅத்த | (6,467,064) | (22,298,516) | (16,984,214) | (11,259,851) | (17,743,539) |
| (iii) | மித்தெனிய | (6,752,696) | (10,931,573) | (7,443,305) | (7,359,607) | (2,161,240) |
| (iv) | சீதாஎலிய | (1,938,689) | (2,645,657) | (14,725,873) | 4,149,887 | (10,660,468) |

- 2013 நவம்பர் 22 ஆந் திகதி மஹாஇலுப்பள்ளம பிரதி கமநல பணிப்பாளர் அலுவலகத்தில் நெல் களஞ்சியத்தில் இருப்புப் பரிசோதனையின் போது 9 நெல் வகைளில் 65 புசல் நெல் இருப்பின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் அப்பற்றாக்குறையின் பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- மஹாஇலுபள்ளம மற்றும் பொலன்னறுவை அரசாங்க விதை உற்பத்தி பண்னைகளின் தெங்குப் பயிர்ச்செய்கையில் விளைச்சல் குறைந்த

மட்டத்தில் காணப்பட்டதுடன் கடந்த ஐந்து வருட காலத்தில் ஒரு மரத்தின் சராசரி வருடாந்த விளைச்சல் முறையே 08 காய்கள் முதல் 12 காய்கள் வரையும், 8 காய்கள் தொடக்கம் 24 காய்கள் வரையிலான வீழ்ச்சினைக் கொண்டிருந்தது.

- மஹாஇலுபள்ளம அரசாங்க விதை உற்பத்தி பண்ணையில் 2012/2013 இன் பெரும்போகத்திலும் 2013 இன் சிறுபோகத்திலும் மேலதிக 30 வகை உணவுப் பயிர்செய்கை பயிரிடுவதற்காக ரூபா 11,407,493 தொகை செலவிடப்பட்டு ரூபா 1,208,482 தொகையான வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 10,199,011 நட்டம் ஏற்பட்டிருந்தது.

- மஹாஇலுபள்ளம அரசின் விதை உற்பத்திப் பண்ணையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 10 வருடங்கள் அளவிலான 06 உழவு இயந்திரங்கள் பொருத்தமான நடவடிக்கை எடுக்காமல் பண்ணையின் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- பொலன்னறுவை அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையின் செயற்பாடுகளை முறையாக பராமரிப்பதற்குத் தேவையான பதவியணியினரில் 18 பல்வேறு பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

- பண்ணையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 01 மாதம் தொடக்கம் 15 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதி கடந்திருந்த 13 உழவு இயந்திரங்கள் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 07 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த 04 இயந்திர உபகரணங்கள் என்பவற்றை பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளைப் பின்பற்றி கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது அலுவலக வளாகத்திலும் களஞ்சியத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(எ) கலைத்தல் முற்பணக் கணக்கு

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 கலைத்தல் முற்பணக் கணக்குகளுக்குரிய அங்கீகரிக்கப்படாத திரண்ட செயற்பாட்டு நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 65,654,747 ஆக இருந்தது.

(ii) கலைத்தல் முற்பணக் கணக்கிற்குரிய 14 வருடங்கள் முதல் 33 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த ரூபா 6,916,657 தொகையான அறவிட வேண்டிய மீதியும், 15 வருடங்கள் முதல் 25 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த ரூபா 5,688,982 தொகையான தீர்க்கப்பட வேண்டிய மீதியும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சொத்துக்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கீழே வகைப்படுத்தப்பட்டதன் படி சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலப்பகுதி** | |
|---|---|---|---|---|
| | | | **1 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு** | **3 வருடங்களுக்கு மேல்** |
| (i) | காணி (ஹெக்டேயர்) | 116.8 | - | 116.8 |
| (ii) | கட்டிடம் | 63 | 02 | 61 |
| (iii) | மோட்டார் வாகனம் | 125 | 15 | 110 |
| (iv) | இயந்திரம் | 935 | 173 | 762 |
| (v) | ஏனைய சொத்துக்கள் | 502 | 304 | 198 |

(ii) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 04 வருடங்கள் முதல் 24 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த பல்வேறு வகைகளில் 15 வாகனங்கள், 15 வருடங்கள் தொடக்கம் 34 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த பல்வேறு வகையான வாகனங்களின் 05 உதிரிப்பாக விடயங்களுக்குரிய 6 அலகுகள் மற்றும் 01 வருடம் முதல் 34 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியைக் கடந்த 06 பல்வேறு சொத்து விடயங்களுக்குரிய 22 அலகுகள் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(iii) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்குரிய 02 ஆம் இலக்க சுற்றுலா விடுதி மிக மோசமாக உடைந்து காணப்பட்டதுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பாவனைக்கு எடுக்கப்படவில்லை.

(iv) சமூக பொருளாதார திட்டமிடல் நிலையத்திற்குரிய ஒரு டிபெண்டர் ஜீப் வண்டி 2008 செப்தெம்பர் 08 ஆந் திகதி முதல் பழுதுபார்க்கப்படாது பொறியியல் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 331,050 பெறுமதியான உதிரிப்பாகங்கள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(v) சமூக பொருளாதார திட்டமிடல் நிலையத்தின் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத உடைந்த நிலையில் காணப்படுகின்ற 10 களஞ்சிய விடயங்களிற்குரிய 38 பொருள் அலகுகள் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அப்புறப்படுத்தப்படாமல் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான காலம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(vi) வவுனியா கமநல பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 08 மாதங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த கிளிநொச்சி பிரதேச கமநல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்குரிய 03 வாகனங்கள், 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பல்வேறு வகைகளில் 07 களஞ்சிய விடயங்களுக்குரிய 09 பொருள் அலகுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எதுவும் எடுக்காது ஆராய்ச்சி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(vii) வவுனியா கமநல பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 08 மாதங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த 04 விடயங்களுக்குரிய 72 பொருள் அலகுகள் பொருத்தமான நடவடிக்கை எடுத்து கைதவிர்க்கப்படாமல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(viii) அநுராதபுரம் கமநல வித்தியாலயத்திற்குரிய மிட்சுபிசி வகையைச் சேர்ந்த ஒரு ஜீப் வண்டி 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தின் பழுதுபார்த்தல் தொடர்பாக மதிப்பீடு தயாரிப்பதற்கோ அல்லது அது தொடர்பாக வேறு நடவடிக்கைகளோ எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) அநுராதபுரம் கமநல வித்தியாலயத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 01 வருடம் தொடக்கம் 10 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த 13 உபகரண விடயங்களுக்குரிய 17 பொருள் அலகுகளை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளைப் பின்பற்றி கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(x) அநுராதபுரம் பண்ணையில் இயந்திர பயிற்சி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 04 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கிடையிலான காலம் கடந்திருந்த 03 மோட்டார் கைச்கிள்கள் மற்றும் 10 களஞ்சிய விடயங்களுக்குரிய இயந்திரம் மற்றும் 19 உபகரண அலகுகளை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளைப் பின்பற்றி கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(xi) பொலன்னறுவை கமநலப் பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையே) அலுவலகத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 01 வருடம் தொடக்கம் 15 வருடங்களுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்த 20 பல்வேறு களஞ்சிய விடயங்களுக்குரிய 43 பொருள் அலகுகள் கைதவிர்க்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(xii) வவுனியா கமநல பாடசாலைக்குரிய 4 சக்கர உழவு இயந்திரம் மற்றும் 04 ஏனைய உபகரண விடயங்களுக்குரிய 64 அலகுகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலம்

கடந்திருந்த போதிலும் கைதவிர்க்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(xiii) போம்புவல பிரதேச நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 08 வருடம் முதல் 17 வருடங்களுக்கிடைப்பட்ட காலத்திற்குரிய 11 விடயங்களுக்குரிய 28 களஞ்சியப் பொருள் அலகுகளை பொருத்தமான நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(xiv) கண்ணொருவ பூந்தோட்டப் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 01 வருடம் முதல் 18 வருட காலப்பகுதியைக் கடந்த 03 வாகனங்கள் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் தனியார் தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சொத்து வகை | அளவு |
|---|---|---|
| (i) | காணி (ஹெக்டேயர்) | 3.5 |
| (ii) | கட்டிடம் | 07 |

## 2.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| நிதிப்பிரமாணம் 880 | மஹாஇலுப்பள்ளம பிரதி கமநலப் பணிப்பாளர் (விதை மற்றும் நடுகைப் பொருட்கள்) அலுவலகத்தின் நிதி மற்றும் இருப்புகள் தொடர்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. |
| **(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்** | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றூநிருபம் | வவுனியா உதவி கமநல பணிப்பாளர் (விதை) அலுவலகத்திலும், வவுனியா கமநல பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்திலும், போம்புவல பிரதேச நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திலும் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) ஏனைய சுற்றுநிரூபம்** | |
| (i) 2003 மே 12 ஆந் திகதிய 2003/01 ஆம் இலக்க கமநல மற்றும் மிருக வள அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிரூபம் | போம்புவல பிரதேச நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்குரிய அரசாங்கத்தின் 07 வீடுகள் பழுது பார்க்கப்படாது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் சிக்கன வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. |
| (ii) 2010 செப்தெம்பர் 23 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க கமநல பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிரூபம் | (i) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் ஆராய்ச்சி தகவல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) வவுனியா கமநல பயன்பாடுகள் ஆராய்ச்சி நிலையத்தில் அறுவடை பரவலாக்கும் செயற்பாடுகளின் போது பிரதேச சிட்டை |

பயன்படுத்தப்படாதிருந்ததுடன் விளைச்சல் பதிவேடும், ஆராய்ச்சி தகவல் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயத்தில் அறுவடை பரவலாக்கும் செயற்பாடுகளின் போது பிரதேச சிட்டை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயத்தில் மஹாஇலுபள்ளம பிரதேச பயிர்ச்செய்கை ஆராய்ச்சி நிலையத்திலும் அநுராதபுரம் பண்ணை இயந்திரப் பயிற்சி நிலையத்திலும் மரங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(v) மஹாஇலுபள்ளம பிரதேச பயிர்ச்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திலும் கண்ணொருவ பூங்கா பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திலும் ஆராய்ச்சித் தகவல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iii) | 2012 மார்ச் 23 ஆந் திகதிய ப/6/3/4/4 ஆம் இலக்க கமநல பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மஹாஇலுபள்ளம அரசாங்க விதை உற்பத்தி பண்ணையில் காணப்பட்ட ரூபா 163,557 தொகையான காலாவதியான கமநல இரசாயன பொருட்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 செயலாற்றல்

-----------------------------

திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) போம்புவல பிரதேச நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 3,255,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு 2013 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயத்திற்குரிய மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட ரூபா 85,000 பெறுமதியான 03 செயற்பாடுகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2003 ஆம் ஆண்டின் பின்னர் இரு வருட விவசாய டிப்ளோமா பாடநெறியை நடாத்துதல் அநுராதபுரம் கமநல வித்தியாலயத்தினால் கைவிடப்பட்டிருந்தது.

(iv) மஹாஇலுப்பள்ளம பிரதி கமநல பணிப்பாளர் (விதை மற்றும் நடுகைப் பொருட்கள்) அலுவலகத்திற்குரிய விதை உற்பத்திப் பண்ணையில் 90 சதுர மீற்றர் 05 பொலிதீன் கூடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 909,918 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தின் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 03 செயற்பாடுகளுக்காக ரூபா 7,950,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 4,824,088 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 3,125,912 அல்லது நிதியேற்பாடுகளில் 39 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயிர்ச்செய்கைகளில் விளைச்சல் குறைவடைதல்**

---

கமநல திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கமநல வித்தியாலயம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட

பயர்ச்செய்கைகளின் விளைச்சல் குறைவடைந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பின்வரும் கமநல வித்தியாலயம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களில் பயிரிடப்பட்ட 1,063 தென்னை மரங்களிலிருந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட விளைச்சல்களின் பிரகாரம் ஒரு தென்னை மரத்திலிருந்து வருடாந்த விளைச்சல் 02 முதல் 93 தேங்காய்கள் வரையிலான வீழ்ச்சியினைக் கொண்ட குறைந்த விளைச்சலைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| **கமநல வித்தியாலயம்/ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்** | **தென்னை மரங்களின் எண்ணிக்கை** | **2008 - 2013 காலப்பகுதியில் ஒரு தென்னை மரத்திலிருந்து வருடாந்த விளைச்சல்** |
|---|---|---|
| | | தேங்காய்களின் எண்ணிக்கை |
| வவுனியா கமநல வித்தியாலயம் | 89 | 23 - 51 |
| போம்புவல பிரதேச நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | 70 | 18 - 45 |
| அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | 126 | 61 - 93 |
| அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயம் | 531 | 02 - 16 |
| அனுராதபுரம் கமநல வித்தியாலயம் | 140 | 19 - 61 |
| அனுராதபுரம் பண்ணையின் இயந்திர பயிற்சி நிலையம் | 107 | 23 - 39 |
| மொத்தம் | 1,063 | |

(ii) பின்வரும் கமநல வித்தியாலயம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களில் பயிரிடப்பட்ட 109 மா மரங்களிலிருந்து விளைச்சல் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒரு மா மரத்திலிருந்து வருடாந்த விளைச்சல் 0.5 கிலோ கிராம் முதல் 25 கிலோ கிராம் வரையிலான வீழ்ச்சியினைக் கொண்ட குறைந்த விளைச்சலைக் கொண்டிருந்தது.

| **கமநல வித்தியாலயம்/ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்** | **மா மரங்களின் எண்ணிக்கை** | **2008 - 2013 காலப்பகுதியில் ஒரு மா மரத்திலிருந்து வருடாந்த விளைச்சல்** |
|---|---|---|
| | | கிலோ கிராம் |
| வவுனியா கமநல வித்தியாலயம் | 60 | 0.5 – 20.0 |
| அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | 13 | 10 - 24 |
| அனுராதபுரம் பண்ணையின் இயந்திர பயிற்சி நிலையம் | 36 | 10 - 25 |
| மொத்தம் | 109 | |

(iii) வவுனியா கமநல வித்தியாலயத்தில் 48 மரமுந்திரிகை மரங்களைக் கொண்ட வித்தியாலய வளவில் மரமுந்திரிகை பயிர்செய்கையில் கிளைகள் வெட்டப்பட்டிராததுடன் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் ஒரு மரத்திற்கான சராசரியான வருடாந்த விளைச்சல் 60 கிராம் முதல் 390 கிராம் வரையிலான வீழ்ச்சினைக் கொண்டிருந்தமையினால் மரமுந்திரிகை விளைச்சல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iv) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் 2012/2013 பெரும்போகத்தில் 18.25 ஏக்கர் நெற் பயிர்செய்கையில் 817.5 புசல் நெல் அளவான குறைந்த விளைச்சல் பெறப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 28,184 தொகை நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் இணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| | விபரம் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 6 மாதங்களுக்கு மேல் 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 வருடங்களுக்குக் குறைவு | 3 வருடங்களுக்கு மேல் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 222,553 | 14,489 | - | 237,042 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 560,886 | 332,465 | - | 893,351 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 634,446 | 145,064 | 249,345 | 1,028,855 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 234,972 | 362,988 | 27,207 | 625,167 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 10 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 893,351 கூட்டுப்பெறுமதியான காலாவதியான 90 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 வங்கிக் கணக்குகளில் 67 சந்தர்ப்பங்களின் போது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட 06 மாதங்களை விஞ்சிய இனங்காணப்படாத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,028,854 ஆக இருந்தது.

(இ) 07 வங்கிக் கணக்குகளில் 112 சந்தர்ப்பங்களின் போது வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்ட 06 மாதங்களை விஞ்சிய இனங்காணப்படாத வரவுகளின் கூட்டுத்தொகை ரூபா 625,167 ஆக இருந்தது.

(ஈ) 9 வங்கிக் கணக்குகளில் 26 சந்தர்ப்பங்களின் போது ரூபா 237,042 கூட்டுத்தொகையான வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்த போதிலும் அந்த வைப்புக்கள் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வைப்புக்கள் தொடர்பாக திணைக்களம் ஆராய்ந்து பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.8 நட்டமும் இழப்பும்**

----------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றது.

(அ) அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயத்தின் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைளைப் பதிவதற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 67,200 பெறுமதியான கைவிரல் அடையாள இயந்திரம் 2012 யூன் 28 ஆந் திகதி தீயினால் அழிவடைந்திருந்தது.

(ஆ) அங்குணகொலபெலெஸ்ஸ கமநல வித்தியாலயத்திற்குரிய ஜீப் வண்டி 2009 ஆகஸ்ட் 19 ஆந் திகதி பழுதுபார்த்தல் நடவடிக்கை வெளியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது ஏற்பட்டதாக இனங்காணப்பட்ட ரூபா 183,753 தொகையான நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் காலாவதியாகியிருந்த ரூபா 79,310 பெறுமதியான 17 வகைகளுக்குரிய கமநல இரசாயனப் பொருட்களின் 144 அலகுகள் மற்றும் காலாவதியாகியமையினால் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதிருந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டு வரப்படுகின்ற 04 பயிர் வகைகளுக்குரிய 62 கிலோ கிராம் விதைகள் களஞ்சியத்தில் வைக்கப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அநுராதபுரம் பிரதி கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலகத்தில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 17,948 தொகையான இருப்புப் பற்றாக்குறை.

(உ) அநுராதபுரம் பண்ணையில் இயந்திரப் பயிற்சி நிலையத்திற்குரிய நான்கு சக்கர உழவு இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் தொகுதியொன்று 2006 மே 15 ஆந் திகதி இழப்பிற்கு உள்ளாகியமையினால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

(ஊ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு கப் வாகனத்தில் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி பொறி மோதியமையினால் ரூபா 272,420 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) கமநல திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் 1977 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 11 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட நட்டங்களின் பெறுமதி ரூபா 5,161,547 ஆக இருந்தது.

(ஏ) பொலன்னறுவை பிரதி கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலகத்திற்கு இணையான 07 கமநல ஆலோசனை அலுவலகத்திலும் ஏனைய 02 நிறுவனங்களுக்குரிய 1998 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட 10 நட்டங்களின் பெறுமதி ரூபா 186,859 ஆக இருந்தது.

## 2.9 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்ச்செய்கை ஆராய்ச்ச மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட காணிகளில் 12 ஹெக்டேயர் அளவிலான இடத்திற்கு போதுமான நீர் வழங்கல் காணப்படாமையினால் சிறு போகத்தின் போது பயிர்செய்வதற்கு முடியாதிருந்ததுடன் நிலையத்திற்குரிய காணிக்கு நீர் வழங்குகின்ற நீர்ப்பாசன வாய்க்காலில் 02 கிலோ மீற்றர் அளவிலான பகுதி மற்றும் நிலைய வளாகத்திலுள்ள வாய்க்கால்களில் 05 கிலோ மீற்றர் அளவிலான பகுதி என்பன மீளமைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக முறையான நீர் முகாமைத்துவத்தைப் பேணுவதற்குத் தேவையான 07 கிலோ மீற்றர் அளவிலான புதிய வாய்க்காலும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்குணகொலபெலெஸ்ஸ தானிய மற்றும் எண்ணெய் பயிர்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்குரிய அரசாங்கத்தின் 18 வீடுகள் நீண்ட காலமாக பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக அவற்றின் கூரை, சிவிலிம், விறாந்தை, வடிகால் முறைமை, தரை, கதவு யன்னல், மலசல கூடம், நீர்க்குழாய் மற்றும் மின்சார முறைமை என்பன உடைந்திருந்தன.

(இ) அநுராதபுரம் பிரதி கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற 05 கமநல ஆலோசனை அலுவலகங்களில் கமநல தகவல் நிலையத்தைப் பேணுவதற்காக தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த கமநல தகவல்கள் தொழில்நுட்ப செயற்திட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டிராததுடன் அந்த உபகரணங்களின் பெறுமதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) அநுராதபுரம் பிரதி கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலகத்திற்குரிய அரசாங்கத்தின் 10 வீடுகள் திருத்தப்படாதிருந்ததுடன் அதில் 04 வீடுகள் மோசமாக உடைந்திருந்தது.

(உ) அனுராதபுரம் கமநல வித்தியாலயத்தைச் சுற்றியுள்ள 3,400 அடி அளவிலான வன பாதுகாப்பு வேலியை பழுதுபார்ப்பதற்கு 6 அடி உயர கம்பி வலையில் 650 அடி நீளம் மற்றும் பல்வேறு அளவுகளில் 70 இரும்புக் குழாய்கள் என்பன 2010 நவம்பர் 29 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வேலி பழுதுபார்க்கப்படாமல் அந்த பொருட்கள் களஞ்சியத்தில் வைத்திருந்ததுடன் அவைகளின் பெறுமதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) அநுராதபுரம் பண்ணையில் இயந்திர பயிற்சி நிலையத்தில் அலுவலகக் கட்டிடம், செயற்பாட்டு பராமரிப்புப் பிரிவினதும் வேலைத் தளத்தினதும் கட்டிடம், 34 அரசாங்க வீடுகள், பாதுகாப்பு வேலி மற்றும் உள்ளக வீதி முறைமைகள் என்பன உரிய பிரகாரம் பழுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பொலன்னறுவை பிரதி கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலகத்தில் அமுல்படுத்தப்பட்ட 1997 சிறுபோக, 1997/1998 பெரும்போக, 1998 சிறுபோக, 1998/1999 பெரும்போக மற்றும் 1999 சிறுபோகங்களில் ‘‘நெல்விளைச்சலை அதிகரிக்கும் விஷேட மாதிரி வயல் மற்றும் கடன் அடிப்படையில் கலப்பற்ற பசளை வழங்குதல்’’ வயல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட உரத்திற்காக ரூபா 1,010,859 தொகை இலங்கை உரக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தவேண்டியிருந்தது. இந்த கடன் தொகை தொடர்பாக தற்போது சேவையில் இருக்கின்ற, ஓய்வுபெற்ற மற்றும் வேலை தடைசெய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்கள் பொறுப்புவாய்ந்தவர்களாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பொலன்னறுவை கமநல பணிப்பாளர் (மாகாணங்களுக்கிடையில்) அலுவலகத்திற்குரிய அரசாங்கத்தின் 16 வீடுகள் திருத்தப்படாதிருந்ததுடன் அதில் 04 வீடுகள் மோசமாக உடைந்திருந்தது.

(ஐ) பொலன்னறுவை பிரதி கமநல பணிப்பாளர் (விதை மற்றும் நடுகைப் பொருள்) அலுவலகத்திற்குரிய 12 ஆம் இலக்க வீட்டில் வாழ்ந்து வருபவரிடமிருந்து 2009 சனவரி முதல் 2012 யூலை வரையான காலத்திற்குரிய ரூபா 55,800 தொகையான

நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த வீட்டில் வாழ்ந்து வருபவரிடமிருந்து 2012 ஆகஸ்ட் முதல் 2013 நவம்பர் வரையான காலத்திற்குரிய வாடகைப் பணமும் அறவிடப்படாதிருந்ததுடன், அக்காலத்திற்குரிய வாடகை அளவும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனித வள முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 675 | 516 | 159 |
| (ii) | மூன்றாம் நிலை | 249 | 88 | 161 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,843 | 2,028 | 815 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,716 | 2,957 | 759 |
| (v) | ஏனையவை (ஒப்பந்தம்) | 2,876 | 2,876 | - |
| | மொத்தம் | 10,359 | 8,465 | 1,894 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 1,894 பதவி வெற்றிடங்களில் 320 வெற்றிடங்கள் பதவிநிலை தரங்களுக்குரிய பதவிகளாக இருந்தது.